<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>
<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

OS.NO.76/2017 & OS.NO.75/2014

P.W.1-VISWANATHAN, S/O.SUBRAMANI

DATE:03.11.2022

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 2, 3 மற்றும் 9 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

எனக்கு எப்போது எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 26.06.1996ல் நடந்தது. அந்த சமயத்தில் நான் இராணுவத்தில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அப்போது நான் எந்த ஊரில் ராணுவத்தில் இருந்தேன் என்றால் ஜம்மு காஷ்மீரில் லடாக்கில் இருந்தேன். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள். அவர்கள் எந்த வருடத்தில் பிறந்தார்கள் என்றால் 09.04.1997 மகள் பிறந்தார், 15.10.1998ல் மகன் பிறந்தான். என் தந்தை, தாய், மனைவி என்னுடைய மகன் மற்றும் என்னுடைய சகோதரர்கள் ஆகியோர்கள் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். தாவா பி ஷெடியூல் சொத்தில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆன தேதியிலிருந்து என் மனைவி அந்த வீட்டில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். எத்தனை வருடங்கள் நாங்கள் அனைவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தோம் என்றால் 2009 வரை கூட்டுக்குடும்பமாக தான் வாழ்ந்து வந்தோம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.22 மற்றும் 23 மணி ஆர்டர்கள் என் தகப்பனார் பெயரில் அனுப்பப்பட்டது என்றால் என் அப்பா, அம்மா இருவருக்கும் அனுப்பியுள்ளேன். என் மனைவிக்கு மணி ஆர்டர் அனுப்பியது போல் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மணி ஆர்டரை என் மனைவிக்கு அனுப்பமாட்டேன், என் தகப்பனாருக்கு தான் அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய பணத்தின் மூலமாகத்தான் எங்கள் குழந்தைகளுக்கு படிப்பு மற்றும் மருத்துவ செலவுக்கு பார்த்துக்கொள்வார்கள் என்றால் இல்லை. என் மனைவிக்கு தனியாக பணம் கொடுப்பேன். நான் என் மனைவிக்கு தனியாக பணம் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய திருமணத்திற்கு பிறகு என் மனைவி மற்றும் குழந்தைகளின் செலவுகளுக்கு என் அப்பாவிற்கு அனுப்பிய மணி ஆர்டரில் தான் பார்த்துக்கொண்டார்கள் என்றால் இல்லை. என் மனைவிக்கு தனியாக பணம் அனுப்புவேன். என் தம்பி முருகனுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2002ல் நடந்தது. என் மற்றும் என் தம்பி திருமணம் ஆகிய இரண்டும் எங்கள் வீட்டு செலவில் தான் நடந்தது என்றால் ஆமாம். என்னுடைய திருமணத்திற்கு என்று தனியாக என் அப்பாவிடம் பணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு பணம் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் வந்தது 62 சென்ட் தான் என்றால் சரிதான். அந்த நிலத்தில் என்ன பயிர் செய்தார்கள் என்பதை நிரூபிக்க அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் இல்லை. 62 சென்ட் நிலம் கரம்பாகத்தான் இருந்தது என்றால் இடையில் பயிர் வைத்து வந்தார்கள். வழக்கு தாக்கல் செய்த பிறகு எந்த பயிரும் வைக்கவில்லை. பாகப்பிரிவினை செய்த காலத்திலிருந்தே எந்த பயிரும் வைக்காமல் கரம்பாக தான் இருந்தது என்றால் சரியல்ல. நான் ராணுவத்தில் பணி செய்து வந்ததால் அந்த நிலத்தில் என்ன பயிர் செய்து வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் அம்மா 10 மாடுகள் வைத்திருந்தாரா என்றால் 2 மாடுகள் வைத்திருந்தார். அந்த மாடுகளை என் தாயார் தான் பார்த்துவந்தார் என்றால் என் மனைவியும் அவருடன் பார்த்து வந்தார். 1996ல் தான் எனக்கு திருமணம் நடந்தது, அதனால் அதற்கு முன்னர் என் தாயார் தான் மாடுகளை கவனித்து வந்தார் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி சுப்பிரமணிக்கு எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லை என்றால் சரிதான். என் அப்பா 1974ல் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றப்பிறகு வேலூரில் தான் நிரந்தரமாக வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் எவ்வளவு பென்ஷன் வாங்கினார் என்றால் 1974ல் ரூ.70 வாங்கினார். ரூ.70 என்பது அந்த காலத்தில் பெரிய தொகை என்றால் சரியல்ல. 1986ல் நான் ராணுவத்தில் சேர்ந்து வாங்கிய சம்பளமும் என் அப்பா வாங்கிய பென்ஷனும் சரிசமம் என்றால் சரிதான். என் அப்பா ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றப்பிறகு ஆற்காடு, சத்துவாச்சாரி, வாலாஜா போன்ற பல ஊர்களில் மாந்தோப்புகளை குத்தகை எடுத்து இருந்தார் என்றால் சரிதான். அவர் எவ்வளவு ரூபாய்க்கு குத்தகை எடுத்தார், அதில் எவ்வளவு வருமானம் வந்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா பி ஷெடியுலில் குறிப்பிட்டுள்ள வீடு 247 சி என்றால் சரிதான். அந்த வீடு என் திருமணத்திற்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வீடு எந்த வருடம் கட்டி முடிக்கப்பட்டது என்றால் 1992ல் ஆரம்பிக்கப்பட்டு 1995ல் கட்டி முடிக்கப்பட்டது. அந்த வீடு 1992ல் கட்டி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணம் 1992ல் 2வது மாதம் வாங்கியதா என்றால் ஆமாம். சட்டப்படி வீடு கட்ட பிளான் வாங்கிய 3 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்றாலும் அதனால் அந்த வீடு 1992ல் கட்டி முடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. தாவா எ ஷெடியூல் சொத்தானது என் தாத்தா சுயமாக சம்பாதித்து கிரையம் வாங்கிய சொத்து என்று என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தில் அவர்களின் சகோதரர்கள் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்களை எந்தெந்த நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் ஞானாம்பிகா, மாதவன், ஏழுமலை, பூங்காவனம் ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார். என் சித்தப்பா நடராஜன் என்பவருக்கு என் அப்பா அவரின் 14 1/2 சென்ட் கொடுத்துவிட்டு நடராஜனின் சொத்து 14 1/2 சென்ட் வாங்கியுள்ளார். என் அக்கா சித்ராவிற்கு எந்த வருடம் கிரையம் கொடுத்தோம் என்றால் 1997ல் கிரையம் கொடுத்தோம். பத்திரப்படி சித்ரா, ஜெயமூர்த்தி ஆகியோர்களுக்கு வா.சா.ஆ.4 ஆவணப்படி 19 சென்ட் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை என் தகப்பனார் தான் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். இந்த சொத்தை வழக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சித்ராவின் கணவர் ஜெயமூர்த்தியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் எவ்வளவு கிரைய தொகை கண்டுள்ளது என்றால் ரூ.36 ஆயிரம். வா.சா.ஆ.10 ஆவணத்தில் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 2 சென்ட் 3வது

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1 1/2 செண்ட் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 3வது பிரதிவாதி அவரின் 1 1/2 செண்ட்டை கிரையம் செய்ததால் தான் அவர் தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் தாவா சொத்தில் எ ஷெடியூல் 3வது அயிட்ட சொத்தை தான் ஞானாம்பிகைக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனார் மற்றும் என் தம்பி ஆகியோர் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் ராமஜெயம் வாரிசுகளும் என் தகப்பனார் மற்றும் 3வது பிரதிவாதி ஆகியோர்கள் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் இராணுவத்தில் இருந்ததால் வா.சா.ஆ.9 ஆவணத்தில் கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணம் என் அப்பா பூங்காவனம்மாளுக்கு பொது அதிகாரம் மூலமாக கொடுக்கப்பட்ட கிரையம் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணம் மற்றும் பொது அதிகார பத்திரத்தில் 3வது பிரதிவாதி கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல. போட்டுள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ஆவணத்தில் 3வது பிரதிவாதியின் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. என் சகோதரி ஜோதியின் திருமணத்தை எங்கள் குடும்பத்தில் தான் செய்தார்கள் என்றால் சரிதான். 3 கிரையமும் குடும்ப நலனுக்காக செய்யப்பட்டது என்றாலும் அந்த கிரைய பணத்தை வைத்து வேறு சொத்து எதுவும் கிரையம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. 3 கிரையத்தை குறித்து எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் 2008க்கு பிறகு தெரியவந்தது. 3 கிரையத்தை ரத்து செய்வதற்கு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதி சுப்பிரமணி அவரின் குடும்ப நலனுக்காகத்தான் கிரையத்தை செய்தார் என்றாலும் அதனால் அந்த ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. நான் எந்தவித பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என் தகப்பனார் மற்றும் தாயார் தனித்தனியாக பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இல்லை. 1972ல் எனக்கு என்ன வயது என்றால் 6 வயது. என் தகப்பனார் வா.சா.ஆ.3 கிரையம் பெற்றது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். வா.சா.ஆ.1 மூலமாக என் தகப்பனாருக்கு 1990ல் தான் பாகம் வந்தது என்றால் சரிதான். என் அம்மா 1973ல் கிரையம் பெற்ற சொத்திற்கு நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் என் அப்பா கொடுத்தார். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனார் அவரின் பதிலுரையில் 4வது பத்தியில் கூட்டுகுடும்ப சொத்து இல்லை என்றும் அது ஜெகதாம்பாளின் தனிப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவண காலக்கட்டத்தில் வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக என் சித்தப்பா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1973ல் நடராஜனும் இராணுவத்தில் தான் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். நடராஜன் இராணுவத்தில் அனுமதி வாங்காமல் தான் சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நடராஜன் இராணுவத்தில் அனுமதி இல்லாமல் கிரையம் வாங்கியதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 1973ல் வா.சா.ஆ.3 ஆவணப்படி என் அம்மா கிரையம் பெற்ற போது என் அப்பா இராணுவத்தில் பணிபுரிந்து வந்ததால் அங்கு அனுமதி பெறாததால் என் அம்மா பெயரில் கிரையம் வாங்கியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் சொத்து வாங்குவதற்கு இராணுவத்தில் அனுமதி வாங்க வேண்டியதே இல்லை

என்றால் சரியல்ல. தாவா பி ஷெடியூல் சொத்து எத்தனை ஆவணங்கள் மூலமாக வாங்கப்பட்டது என்றால் வா.சா.ஆ.3 ஆவணம் மூலமாக 14 1/2 செண்ட், வா.சா.ஆ.6 ஆவணப்படி ஒரு கிரையமும் வாங்கப்பட்டது. 1973ல் வாங்கப்பட்ட சொத்தின் சர்வே எண்.143/1எ1 ஆகும் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணப்படி கிரைய பெற்ற சொத்தின் சர்வே எண்.143/1பி1 என்றால் சரிதான். கிரையம் வாங்கப்பட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 29 செண்ட் என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண்கள் தனித்தனியாக குறிப்பிட்டு தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 ஆவண மூலமாக என் தாயார் 3வது பிரதிவாதிக்கு செட்டில்மண்ட் ஆவணம் மூலமாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் செட்டில்மண்ட் பத்திரம் தான் என் தாயார் எழுதிக்கொடுத்த செட்டில்மண்ட் பத்திரத்தின் அசல் என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் செல்லாது. அந்த ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்ய பரிகாரம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கிலும் அந்த பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாய் என் தம்பிக்கு எவ்வளவு சொத்து எழுதிக்கொடுத்தார் என்றால் 11 1/2 செண்ட் எழுதிக்கொடுத்தார். என் தம்பிக்கு எழுதிக்கொடுத்த சொத்து 1973ல் நவாப்ஜானிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்து என்றால் இல்லை. 3வது பிரதிவாதிக்கு செட்டில்மண்ட் எழுதிய தேதியிலேயே 4வது பிரதிவாதிக்கு என் தாயார் செட்டில்மண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் செல்லாது. 3, 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மண்ட் எழுதிக்கொடுத்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 21 செண்ட். ஆனால் என் தாயார் கிரையம் பெற்ற சொத்தின் மொத்த விஸ்தீரணம் 29 செண்ட் என்றால் சரிதான். மீதி 8 செண்ட் நிலம் தேசிய நெடுஞ்சாலை துறையால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்குண்டான இழப்பீடு தொகையை என் தாயாருக்கு தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

வழக்கறிஞர் கோரிக்கையின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

P REVATHY

Digitally signed by P REVATHY

கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
வேலூர்.